NLC India Limited

('Navratna' - Government of India Enterprise)
Registered Office: No.135, EVR Periyar High Road, Kilpauk, Chennai-600 010.
Corporate Office: Block-1, Neyveli-607 801, Cuddalore District, Tamil Nadu.
CIN : L93090TN1956GOI003507, Website: www.nlcindia.in
email: cosec@nlcindia.in Phone: 044-28369139

Lr. No. NLC/Secy/LODR/2026 **Date: 05.11.2026**

To **National Stock Exchange of India Ltd.** Exchange Plaza, C-1, Block G, Bandra Kurla Complex, Bandra (E) Mumbai – 400 051. **Scrip Symbol : NLCINDIA**	To **BSE Ltd.** Phiroze JeeJeebhoy Towers, Dalal Street, Mumbai - 400 001. **Scrip Code: 513683**

Sir/Madam,

Sub: Intimation under SEBI (LODR) Regulations, 2015 – Press Release

***

We furnish herewith a copy of Press Release dt. 04.11.2026 for your reference and record please.

Thanking You,

Yours faithfully,

For NLC India Limited,

SUSHANTA KUMAR PANDA

Digitally signed by SUSHANTA KUMAR PANDA
Date: 2026.11.05 12:03:29 +05'30'

Company Secretary
& Compliance Officer

Encl: As above

CC/E/080/2026 Date: 04-11-2026

PRESS RELEASE

FINANCIAL RESULTS OF NLCIL FOR THE QUARTER & HALF YEAR ENDED 30.09.2026

Key Highlights - Standalone Physical and Finance Performance for the Half Year Ended September 2026:

- Achieved Coal production of 78.55 LT compared to 74.87 LT in H1 2025-26, registering a growth of 4.92%.
- Achieved Coal Sales of 101.23 LT compared to 88.37 LT in H1 2025-26, registering a growth of 14.55%.
- Achieved NLCIL (Thermal) Power Gross Generation of 8,306.66 MU as against 7,922.6 MU, registering a growth of 4.85%.
- Total Revenue from operations for the Half Year ended 30th Sep 2026 is Rs. 5,562.61 Cr against Rs. 5,060.51 Cr in the corresponding period of previous year, registering a growth of 9.92%.
- Total Comprehensive Income (Comprising Profit or (Loss) and Other Comprehensive Income) for the period ended 30th Sep 2026 is Rs.1,623.41 Cr against Rs.842.25 Cr in the corresponding period of previous year, registering a growth of 92.75%.
- The Net-worth as on 30.09.2026 stood at 20,858.73 Cr compared to 18,099.42 Cr in the previous year, registering a growth of 15.25%.
- The Collection efficiency of Power debtors till 30.09.2026 stood at 104.58 % reflecting robust recovery measures and sustained improvement in receivables management.

Key Highlights - Group Physical and Finance performance for the Half Year Ended Sep 2026:

- Achieved Gross Thermal Power Generation of 14,621.90 MU compared to 12,249.34 MU in H1 2025-26, registering a growth of 19.37%.
- Achieved Renewable Power Generation of 1,485.82 MU compared to 1,126.53 MU in H1 2025-26, registering a growth of 31.89%.
- Achieved Coal production of 78.78 LT compared to 74.87 LT in H1 2025-26, registering a growth of 5.22%.

- All time Highest Ever Revenue from operations for the Half Year Ended 30th Sep 2026 of Rs.9,449.10 Cr as against Rs.8,004.02 Cr in the corresponding period of previous year, registering a growth of 18.05%.

- All time Highest Ever Total Profit After tax (PAT) for the Half Year ended 30th Sep 2026 of Rs. 1,764.34 Cr as against Rs. 1,564.01 Cr in the corresponding period of previous year, registering a growth of 12.81%.

- The Net-worth as on 30.09.2026 stood at 23,400.83 Cr compared to 19,965.62 Cr in the previous year of H1 2025-26 registering a growth of 17.21%.

- Interim dividend @ 15% is declared for the year 2026-27.

General Manager (HR)
Corporate Communications

பத்திரிக்கை செய்தி

நிததொது/த/074/2026 நாள்: **04.11.2026**

30.09.2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் முதல் அரையாண்டிற்கான என்எல்சிஐஎல்-இன் நிதிநிலை முடிவுகள்!

செப்டம்பர் 2026-இல் முடிவடைந்த முதல் அரையாண்டிற்கான தனிப்பட்ட (Standalone) உற்பத்தி மற்றும் நிதிச் செயல்பாடுகளின் முக்கிய சிறப்பம்சங்கள்:

1. கடந்த நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டில் 74.87 லட்சம் டன்னாக (LT) இருந்த நிலக்கரி உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் (2026-27) முதல் அரையாண்டில் 78.55 லட்சம் டன்னாக உயர்ந்து, 4.92 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
2. கடந்த நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டில் 88.37 லட்சம் டன்னாக (LT) இருந்த நிலக்கரி விற்பனை, நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் 101.23 லட்சம் டன்னாக உயர்ந்து, 14.55 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
3. என்எல்சிஐஎல் (அனல் மின்சாரம்) மொத்த மின் உற்பத்தி, கடந்த ஆண்டின் 7,922.60 மில்லியன் யூனிட்டிலிருந்து (MU) 8,306.66 மில்லியன் யூனிட்டாக உயர்ந்து, 4.85 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
4. 30.09.2026 அன்றுடன் முடிவடைந்த முதல் அரையாண்டிற்கான செயல்பாடுகள் மூலம் கிடைத்த மொத்த வருவாய், கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இருந்த ரூ. 5,060.51 கோடியுடன் ஒப்பிடுகையில், ரூ. 5,562.61 கோடியாக உயர்ந்து, 9.92 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
5. 30.09.2026 அன்றுடன் முடிவடைந்த முதல் அரையாண்டிற்கான மொத்த விரிவான வருமானம் (லாபம் அல்லது (நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் உட்பட), கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இருந்த ரூ. 842.25 கோடியுடன் ஒப்பிடுகையில், ரூ. 1,623.41 கோடியாக உயர்ந்து, 92.75 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
6. செப்டம்பர் 30-ஆம் தேதியுடன் முடிவடைந்த முதல் அரையாண்டில், நிகர மதிப்பு (Net-worth), கடந்த நிதியாண்டில் இருந்த ரூ. 18,099.42 கோடியுடன் ஒப்பிடுகையில், 15.25 சதவிகித வளர்ச்சி பெற்று ரூ. 20,858.73 கோடியாக உயர்ந்துள்ளது.
7. 30.09.2026 நிலவரப்படி, மின் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிப்பதில் என்எல்சிஐஎல் 104.58% வசூல் திறனை எட்டியுள்ளது. இது நிறுவனத்தின் துரித வசூல் நடவடிக்கைகளுக்கும், சிறந்த நிதி நிர்வாகத்திற்கும் சான்றாக அமைந்துள்ளது.

செப்டம்பர் 2026-இல் முடிவடைந்த அரையாண்டிற்கான குழுமத்தின் (Group) உற்பத்தி மற்றும் நிதிச் செயல்பாடுகளின் முக்கிய சிறப்பம்சங்கள்:

1. கடந்த நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டில் 12,249.34 மில்லியன் யூனிட்டாக (MU) இருந்த மொத்த அனல் மின் உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் 14,621.90 மில்லியன் யூனிட்டாக உயர்ந்து, 19.37 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

2. கடந்த நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டில் 1,126.53 மில்லியன் யூனிட்டாக (MU) இருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் 1,485.82 மில்லியன் யூனிட்டாக உயர்ந்து, 31.89 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

3. கடந்த நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டில் 74.87 லட்சம் டன்னாக (LT) இருந்த நிலக்கரி உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் 78.78 லட்சம் டன்னாக உயர்ந்து, 5.22 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

4. 30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த முதல் அரையாண்டில், செயல்பாடுகளின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 9,449.10 கோடியாக உயர்ந்துள்ளது; இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இருந்த ரூ. 8,004.02 கோடியுடன் ஒப்பிடுகையில், 18.05 சதவிகித வளர்ச்சியுடன், முன்னெப்போதும் இல்லாத அதிகபட்ச வருவாயை எட்டியுள்ளது.

5. 30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த முதல் அரையாண்டில், நிறுவனத்தின் வரிக்குப் பிந்தைய மொத்த லாபம் (PAT) ரூ. 1,764.34 கோடியாக உயர்ந்து, இதுவரை இல்லாத வகையில் அதிகபட்ச லாபத்தை எட்டியுள்ளது; இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இருந்த ரூ. 1,564.01 கோடியுடன் ஒப்பிடுகையில், 12.81 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

6. செப்டம்பர் 30-ஆம் தேதியுடன் முடிவடைந்த முதல் அரையாண்டில், நிகர மதிப்பு (Net-worth), கடந்த நிதியாண்டின் (2025-26) முதல் அரையாண்டில் இருந்த ரூ. 19,965.62 கோடியுடன் ஒப்பிடுகையில், 17.21 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 23,400.83 கோடியாக உயர்ந்துள்ளது.

7. 2026-27 ஆம் நிதியாண்டிற்கு 15% இடைக்கால ஈவுத்தொகை (Interim dividend) அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது மேலாளர் (மனித வளம்)
நிறுவன தகவல் தொடர்புகள்